ஆபகூக் - முன்னுரை

காலமும் இடமும்

கி.மு. 679 - 648 ஆம் வருஷங்களில் ஆபகூக்கின் புஸ்தகம் பாலஸ்தீன தேசத்தில் எழுதப்பட்டது.

ஆசிரியர்

ஆபகூக் தீர்க்கதரிசி (ஆப 1:1,3:1).

மையக்கருத்து

1. தேவனுடைய பரிசுத்தத்தையும், அவருடைய நீதியையும் நிரூபித்தல்.
2. தேவனுடைய சுபாவங்களை நிரூபிப்பதில் ஆபகூக் மற்ற தீர்க்கதரிசிகளைவிட அதிகக் கவனம் செலுத்தியிருக்கிறார்.
3. தீர்க்கதரிசிக்கும், தேவனுக்கும் இடையில் நடைபெறும் சம்பாஷணை இந்தப் புஸ்தகத்தில் மையக்கருத்தாக உள்ளது.
4. பூமியில் அநியாயத்தை முடிவுக்குக் கொண்டு வரவேண்டுமென்று ஆபகூக் தேவனிடம் விண்ணப்பம் பண்ணுகிறார்.
5. யூதாவின்மீது மகா பயங்கரமான பழிவாங்கும் நாள் பாபிலோனிலிருந்து வரும் என்று கர்த்தர் ஆபகூக்கிற்குப் பதிலளிக்கிறார். (ஆப 1:1-11).
6. ஆபகூக் கர்த்தரிடத்தில் மற்றொரு விண்ணப்பத்தையும் கேட்கிறார். (ஆப 1:12-17) இரண்டாம் அதிகாரத்தில் கர்த்தர் கூறும் பதில் கொடுக்கப் பட்டிருக்கிறது. யூதாவின்மீது மேலும் பல நியாயத் தீர்ப்புகள் வரும்.
7. இஸ்ரவேல் உயிர்ப்பிக்கப்பட வேண்டுமென்று ஆபகூக் ஜெபிக்கிறார். இந்த ஜெபம் ஆபகூக் மூன்றாம் அதிகாரத்தில் விவரிக்கப் பட்டிருக்கிறது.
8. யூதா தேசத்தார் தேவனுடைய சித்தத்திற்குக் கீழ்ப்படிய வேண்டும். இல்லையென்றால், அவர்களுக்குத் தண்டனை கொடுக்கப்படும். யூதா தேசம் அழிக்கப்படும்.

புள்ளிவிவரங்கள்

அதிகாரங்கள் - 3

வசனங்கள் - 56

கேள்விகள் - 12

புதிய தீர்க்கதரிசனங்கள் - 5

கட்டளை - 1

முன்னறிவிப்புக்கள் - 20

ஆபகூக் தீர்க்கதரிசியின் புஸ்தகத்தில் தேவனிடத்திலிருந்து வந்திருக்கும் விசேஷித்த செய்திகள். (ஆப 1:5; ஆப 2:2).

பொருளடக்கம்

I. இஸ்ரவேலுக்கு எதிராக ஜெபம் (1:1-4)

II. சிதறிப்போவது குறித்து தீர்க்கதரிசனம்

1. தேசங்கள் நடுவே தேவனுடைய கிரியை (1:5)
2. பாபிலோனியச் சிறையிருப்பு (1:6-11)

III. சாட்சி - தேவனுடைய சுபாவம் (1:12-16)

IV. ஆபகூக்கிற்கு தேவனுடைய பதிலுரை

1. தரிசனத்தை எழுது - காரணம் (2:1-3)
2. வேறுபட்ட சுபாவங்கள் (2:4)
3. பேராசை (2:5-8)
4. பொல்லாத ஆதாயத்தைத் தேடுகிறவர்களுக்கு ஐயோ (2:9-13)

ஆபகூக் - முன்னுரை

5. காரணம் - பூமியில் தேவனுடைய நோக்கம் (2:14)

6. மதுபானப்பிரியருக்கு ஐயோ - காரணம் (2:15-17)

7. விக்கிரகாராதனைக்காரருக்கு ஐயோ - காரணம் (2:18-19)

V. ஆபகூக்கின் ஜெபம்

1. தேச எழுப்புதலுக்காக (3:1-2)

2. தேவனுடைய முப்பது அம்ச மகத்துவம் (3:3-15)

3. ஆபகூக்கின்மீது ஏற்பட்ட விளைவு (3:16)

4. ஆறு அம்ச பொருத்தனை (3:17-19)

ஆபகூக் - தொகுப்புரை

1 அதிகாரம்

I. இஸ்ரவேலுக்கு எதிராக ஜெபம் - (1:1-4)

ஆப 1:1 ஆபகூக் என்னும் தீர்க்கதரிசி தரிசனமாய்க் கண்ட பாரம்.

ஆப 1:2 கர்த்தாவே, நான் எதுவரைக்கும் உம்மைநோக்கிக் கூப்பிடுவேன், நீர் கேளாமலிருக்கிறீரே! கொடுமையினிமித்தம் நான் எதுவரைக்கும்உம்மை நோக்கிக் கூப்பிடுவேன், நீர் இரட்சியாமலிருக்கிறீர்!.

ஆப 1:3 நீர் எனக்கு அக்கிரமத்தைக் காண்பித்து, என்னைத் தீவினையைப் பார்க்கப் பண்ணுகிறதென்ன? கொள்ளையும் கொடுமையும் எனக்கு எதிரே நிற்கிறது; வழக்கையும் வாதையும் எழுப்புகிறவர்கள் உண்டு.

ஆப 1:4 ஆகையால் நியாயப்பிரமாணம் பெலனற்றதாகி, நியாயம் ஒருபோதும் செல்லாமற் போகிறது; துன்மார்க்கன் நீதிமானை வளைந்துகொள்ளுகிறான்; ஆதலால் நியாயம் புரட்டப்படுகிறது.

"ஆபகூக் என்னும் தீர்க்கதரிசி" - தீர்க்கதரிசன புஸ்தகங்களை எழுதியவர்களில் நான்கு பேர்கள் மட்டுமே தங்களைத் தீர்க்கதரிசிகள் என்று அறிவித்திருக்கிறார்கள். ஏசாயா தன்னை ஒரு தீர்க்கதரிசி என்று மூன்று இடங்களில் கூறியிருக்கிறார். (ஏசா 37:2; ஏசா 38:1; ஏசா 39:3). எரேமியா தன்னை ஒரு தீர்க்கதரிசி என்று 31 தடவைகள் குறிப்பிட்டிருக்கிறார்.(எரே20:2;எரே 25:2; எரே 28:6, 10-15; எரே 29:1,29; எரே 32:2; எரே 34:6; எரே 36:8,26; எரே 37:2-13; எரே 38:9-14; எரே 42:2-4; எரே 43:6; எரே 45:1; எரே 46:1,13; எரே 47:1; எரே 49:34; எரே 50:1; எரே 51:59). ஆபகூக் தன்னை ஒரு தீர்க்கதரிசி என்று இரண்டு முறையும், (ஆப 1:1; ஆப 3:1), ஆகாய் தன்னை ஒரு தீர்க்கதரிசி என்று 5 முறையும் (ஆப 1:1-3,12; ஆப 2:1,10) குறிப்பிட்டிருக்கிறார்கள். மற்ற தீர்க்கதரிசிகளின் முன்னறிவிப்புகள் நிறைவேறியதின் நிமித்தமாகவும், அவர்களுடைய புஸ்தகங்களில் எழுதப் பட்டிருக்கும் செய்திகளின் நிமித்தமாகவும் அவர்களும் தீர்க்கதரிசிகள் என்று அழைக்கப் படுகிறார்கள்.

"பாரம்" (burden) - யூதாவின்மீது நியாயத் தீர்ப்பு அறிவிக்கப்படுகிறது. யூதா அழிக்கப்படும். கல்தேயர் அவர்களைச் சிறைப்பிடித்துச் செல்வார்கள். (ஆப 1:5-11)

"கர்த்தாவே, நான் எதுவரைக்கும் உம்மை நோக்கிக் கூப்பிடுவேன்" - ஆபகூக் யூதாவிற்காகச் சில காலம் ஜெபம் பண்ணிக் கொண்டு வருகிறார். ஆனால் கர்த்தரிடத்திலிருந்து அவருக்குப் பதில் கிடைக்கவில்லை. சங்கீதக்காரனைப்போல ஆபகூக்கும் கர்த்தருடைய பதிலுக்காக ஆர்வத்தோடு காத்திருக்கிறார். (சங் 18:6,41; சங் 22:24).

யூதாவின் பாவங்கள் (ஆப 1:3-4)

1. கொள்ளை
2. கொடுமை
3. வழக்கு
4. வாதை
5. நியாயப்பிரமாணத்தை மீறுதல்
6. அநீதி
7. துன்மார்க்கன் நீதிமானை வளைந்து கொள்ளுதல்

II. சிதறிப்போவது குறித்து தீர்க்கதரிசனம் - (1:5-11)

1. தேசங்கள் நடுவே தேவனுடைய கிரியை

ஆப 1:5 நீங்கள் புறஜாதிகளை நோக்கிப் பார்த்து, ஆச்சரியப்பட்டுப் பிரமியுங்கள்; விவரிக்கப் பட்டாலும் நீங்கள் விசுவாசியாத ஒரு கிரியையை உங்கள் நாட்களில் நடப்பிப்பேன்.

ஆபகூக் - தொகுப்புரை

1 அதிகாரம்

தீர்க்கதரிசன எண் - 1

"நீங்கள் புறஜாதிகளை நோக்கிப் பார்த்து, ஆச்சரியப்பட்டுப் பிரமியுங்கள்......" (ஆப 1:5-11) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

நிறைவேறிய முன்னறிவிப்புகள்

1. நீங்கள் புறஜாதிகளை நோக்கிப் பார்த்து, ஆச்சரியப்பட்டுப் பிரமியுங்கள்; விவரிக்கப் பட்டாலும் நீங்கள் விசுவாசியாத ஒரு கிரியையை உங்கள் நாட்களில் நடப்பிப்பேன். (ஆப 1:5; அப் 13:41).

2. நான் கல்தேயரென்னும் கொடிதும் வேகமுமான ஜாதியாரை எழுப்புவேன்.

3. அவர்கள் தங்களுடையதல்லாத வாசஸ்தலங்களைக் கட்டிக்கொள்ள தேசத்தின் விசாலங்களில் நடந்து வருவார்கள். (ஆப 1:6).

4. அவர்கள் கெடியும் பயங்கரமுமானவர்கள்; அவர்களுடைய நியாயமும் அவர்களுடைய மேன்மையும் அவர்களாலேயே உண்டாகும். (ஆப 1:7).

5. அவர்களுடைய குதிரைகள் சிவிங்கிகளிலும் வேகமும், சாயங்காலத்தில் திரிகிற ஓநாய்களிலும் தீவிரமுமாயிருக்கும். (ஆப 1:8)

6. அவர்களுடைய குதிரைவீரர் பரவுவார்கள்.

7. அவர்களுடைய குதிரைவீரர் தூரத்திலிருந்து வருவார்கள்.

8. இரைக்குத் தீவிரிக்கிற கழுகுகளைப் போல் பறந்து வருவார்கள்.

9. அவர்களெல்லாரும் கொடுமை செய்யவருவார்கள் (ஆப 1:9).

10. அவர்களுடைய முகங்கள் சுவறச் செய்யும் கீழ்க்காற்றைப்போலிருக்கும்.

11. அவர்கள் மணலத்தனை ஜனங்களைச் சிறைபிடித்துச் சேர்ப்பார்கள்.

12. அவர்கள் ராஜாக்களை ஆகடியம் பண்ணுவார்கள் (ஆப 1:10).

13. அதிபதிகள் அவர்களுக்குப் பரியாசமாயிருப்பார்கள்.

14. அவர்கள் அரண்களையெல்லாம் பார்த்து நகைப்பார்கள்.

15. மண்மேடுகளைக் குவித்து அவைகளைப் பிடிப்பார்கள்.

16. அவனுடைய மனம்மாற, அவன் தன் பெலன் தன் தேவனாலே உண்டானதென்று சொல்லி மிஞ்சிப் போய்க் குற்றவாளியாவான். (ஆப 1:11).

"விவரிக்கப்பட்டாலும் நீங்கள் விசுவாசியாத ஒரு கிரியையை உங்கள் நாட்களில் நடப்பிப்பேன்." - இந்த வாக்கியம் அப் 13:41 ஆவது வசனத்தில் மேற்கோளாகக் கூறப் பட்டிருக்கிறது. விசுவாசிகளுடைய ஜீவியங்களில் பரிசுத்த ஆவியானவருடைய வல்லமையினால் ஆவிக்குரிய அற்புதமான காரியங்கள் நடைபெறும். கல்தேயர் மூலமாக யூதா தேசத்தாருக்கு அழிவு உண்டாயிற்று. கர்த்தர் நேபுகாத்நேச்சாருக்கும், அவனுடைய சேனைக்கும் அற்புதமாக உதவி புரிந்தார். அதுபோலவே பவுலும், தன்னுடைய நாட்களில் பரிசுத்த ஆவியானவரின் வல்லமையினாலும், இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலும் அற்புதங்கள் நடைபெறுவதாகக் கூறுகிறார்.

2. பாபிலோனியச் சிறையிருப்பு

ஆப 1:6 இதோ, நான் கல்தேயரென்னும் கொடிதும் வேகமுமான ஜாதியாரை எழுப்புவேன்; அவர்கள் தங்களுடைய தல்லாத வாசஸ்தலங்களைக் கட்டிக்கொள்ள தேசத்தின் விசாலங்களில் நடந்துவருவார்கள்.

ஆபகூக் - தொகுப்புரை

1 அதிகாரம்

ஆப 1:7 அவர்கள் கெடியும் பயங்கரமுமானவர்கள்; அவர்களுடைய நியாயமும் அவர்களுடைய மேன்மையும் அவர்களாலேயே உண்டாகும்.

ஆப 1:8 அவர்களுடைய குதிரைகள் சிவிங்கிகளிலும் வேகமும், சாயங்காலத்தில் திரிகிற ஓநாய்களிலும் தீவிரமுமாயிருக்கும்; அவர்களுடைய குதிரைவீரர் பரவுவார்கள்; அவர்களுடைய குதிரைவீரர் தூரத்திலிருந்து வருவார்கள்; இரைக்குத் தீவிரிக்கிற கழுகுகளைப் போல் பறந்து வருவார்கள்.

ஆப 1:9 அவர்களெல்லாரும் கொடுமை செய்யவருவார்கள்; அவர்களுடைய முகங்கள் சுவறச் செய்யும் கீழ்க்காற்றைப் போலிருக்கும்; அவர்கள் மணலத்தனை ஜனங்களைச் சிறைபிடித்துச் சேர்ப்பார்கள்.

ஆப 1:10 அவர்கள் ராஜாக்களை ஆகடியம் பண்ணுவார்கள்; அதிபதிகள் அவர்களுக்குப் பரியாசமாயிருப்பார்கள்; அவர்கள் அரண்களையெல்லாம் பார்த்து நகைத்து, மண்மேடுகளைக் குவித்து அவைகளைப் பிடிப்பார்கள்.

ஆப 1:11 அப்பொழுது அவனுடைய மனம்மாற, அவன் தன் பெலன் தன் தேவனாலே உண்டானதென்று சொல்லி மிஞ்சிப்போய்க் குற்றவாளியாவான்.

"நான் கல்தேயரென்னும் கொடிதும் வேகமுமான ஜாதியாரை எழுப்புவேன்" - கர்த்தர் கல்தேயரை யூதாவிற்கு விரோதமாக எழுப்புகிறார். கர்த்தருக்கு எல்லா தேசங்களின் மீதும் எல்லா ஜாதியார்மீதும் சர்வ அதிகாரம் உள்ளது. அவர் ராஜாக்களை நியமிக்கிறார். ராஜாக்களைத் தள்ளுகிறார். தம்முடைய சித்தத்தை நிறைவேற்றுவதற்குத் தேவையான அனைத்துக் காரியங்களையும் கர்த்தர் செய்து முடிக்கிறார்.

இஸ்ரவேலைக் குறித்த தம்முடைய திட்டமும், மனுக்குலத்தைக் குறித்த தம்முடைய திட்டமும் நிறைவேறுவதற்காகக் கர்த்தர் ஆதியிலிருந்தே கிரியை செய்து வருகிறார். இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகை வரையிலும் கர்த்தருடைய கிரியை தொடர்ந்து நடைபெறும். கர்த்தருடைய சித்தம் நிறைவேறுவதற்காக சில ஜாதியார் எழும்ப வேண்டும். சில ஜாதியார் விழவேண்டும். (தானி 10:13).

கல்தேயரைப் பற்றிய விளக்கம்

1. கொடியவர்கள் (ஆப 1:6)
2. வேகமானவர்கள்
3. கெடியவர்கள் (ஆப 1:7)
4. பயங்கரமானவர்கள்
5. நியாயமுள்ளவர்கள்
6. மேன்மையுள்ளவர்கள்
7. தீவிரமுள்ளவர்கள் (ஆப 1:8)
8. தீவிரிக்கிறவர்கள் (ஆப 1:8)
9. கொடுமையானவர்கள் (ஆப 1:9)
10. இரக்கமில்லாதவர்கள்
11. ஆகடியம் பண்ணுகிறவர்கள்(ஆப 1:10)
12. பரியாசம் பண்ணுகிறவர்கள்
13. நகைக்கிறவர்கள்
14. விக்கிரகாராதனைக்காரர் (ஆப 1:11)

"அவன் தன் பெலன் தன் தேவனாலே உண்டானதென்று சொல்லி" - புறஜாதி தேசத்தார் எல்லோருமே தங்களுடைய வெற்றிகளுக்கு தங்களுடைய தேசத்தின் விக்கிரகங்களே காரணமென்று நினைக்கிறார்கள். நேபுகாத்நேச்சாருக்கும் விக்கிரக தெய்வங்கள் இருந்தது. தன்னுடைய வெற்றிக்கு அந்தத் தெய்வங்களே காரணமென்று அவன் நினைத்தான். ஆனால் கர்த்தரே அவனை எழுப்பியிருக்கிறார். இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் மாத்திரமே மெய்யான தேவன். ஜீவனுள்ளவர். (தானி 2:46-48; தானி 3:26-30; தானி 4:32-37).

1 அதிகாரம்

III. சாட்சி - தேவனுடைய சுபாவம்

ஆப 1:12 கர்த்தாவே, நீர் பூர்வகாலமுதல் என் தேவனும், என் பரிசுத்தரு மானவர் அல்லவா? நாங்கள் சாவதில்லை; கர்த்தாவே, நியாயத்தீர்ப்பு செய்ய அவனை வைத்தீர்; கன்மலையே, தண்டனை செய்ய அவனை நியமித்தீர்.

ஆப 1:13 தீமையைப் பார்க்கமாட்டாத சுத்தக்கண்ணனே, அநியாயத்தை நோக்கிக் கொண்டிருக்கமாட்டீரே; பின்னை துரோகிகளை நீர் நோக்கிக் கொண்டிருக்கிறதென்ன? துன் மார்க்கன் தன்னைப் பார்க்கிலும் நீதிமானை விழுங்கும்போது நீர் மௌனமாயிருக்கிற தென்ன?

ஆப 1:14 மனுஷரைச் சமுத்திரத்து மச்சங்களுக்கும், அதிகாரியில்லாத ஊர்வனவற்றிற்கும் சமான மாக்குகிறதென்ன?

ஆப 1:15 அவர்களெல்லாரையும் தூண்டிலினால் இழுத்துக் கொள்ளுகிறான்; அவர்களைத் தன் வலையினால் பிடித்து, தன் பறியிலே சேர்த்துக்கொள்ளுகிறான்; அதினால் சந்தோஷப்பட்டுக் களிகூருகிறான்.

ஆப 1:16 ஆகையால் அவைகளினால் தன் பங்கு கொழுப்புள்ளதும், தன் போஜனம் ருசிகரமுள்ளதுமாயிற்று என்று சொல்லி அவன் தன் வலைக்குப் பலியிட்டுத் தன் பறிக்குத் தூபங்காட்டுகிறான்.

ஆப 1:17 இதற்காக அவன் தன் வலையை இழுத்து அதிலுள்ளவைகளைக் கொட்டிக் கொண்டிருந்து, இரக்கமில்லாமல் ஜாதிகளை எப்போதும் கொன்றுபோட வேண்டுமோ?

"பூர்வகாலமுதல்" - கர்த்தர் சதாகாலத்திலும் தேவனாக இருக்கிறார். (சங் 41:13; சங் 90:2; சங் 93:2; சங் 103:17; சங் 106:48; மீகா 5:2).

"நாங்கள் சாவதில்லை" - மனுஷனுடைய ஆத்துமாவும், ஆவியும் சாவதில்லை.

தேவனைப் பற்றிய சத்தியம்

1. நித்தியமானவர் (ஆப 1:12)
2. பரிசுத்தர்
3. நீதியுள்ளவர்
4. வல்லமையுள்ளவர்
5. சுத்தர் (ஆப 1:13).
6. சிருஷ்டிக்கிறவர் (ஆப 1:14).

"தீமையைப் பார்க்கமாட்டாத சுத்தக் கண்ணனே" - கர்த்தர் பாவத்தையும், தீமையையும் பார்க்கிறார். ஆனால் அவற்றை அவர் ஒருபோதும் அங்கிகரிப்பதில்லை. மனுஷருடைய எல்லாத் தீமையையும் கர்த்தர் பட்டியலிட்டு வைத்திருக்கிறார். மனுஷனுடைய நன்மை தீமைக்குத்தகுந்த பிரகாரம் அவனை நீதியாய் நியாயந்தீர்ப்பார். (மத் 16:27; அப் 17:31; ரோமர் 2:12-16; ரோமர் 14:10; 2கொரி. 5:10; வெளி. 20:11-15).

"துரோகிகளை நீர் நோக்கிக் கொண்டிருக்கிறதென்ன?" - மனுஷன் செய்யும் பாவத்திற்குக் கர்த்தர் காரணமானவர் அல்ல. மனுஷனுக்கு அவர் சுயாதீன சித்தத்தைக் கொடுத்திருக்கிறார். ஆகையினால் மனுஷனை அவர் அவனுடைய போக்கிற்குப் போக அனுமதித்து விடுகிறார். ஆயினும் மனுஷனுடைய பாவங்களைக் குறித்து அவனுக்கு எச்சரிக்கிறார். அவன் மனந்திரும்பவில்லையென்றால், அவனுடைய பாவத்திற்குத் தண்டனை நிச்சயம் கிடைக்கும்.

"அவர்களெல்லாரையும் தூண்டிலினால் இழுத்துக்கொள்ளுகிறான்" - பழங்காலத்தில் தூண்டில்போட்டு மீன்பிடிப்பது வழக்கம். தங்களுடைய விக்கிரக தெய்வங்களே தங்களுக்கு அதிகமான மீன்களைக் கொடுக்கிறது என்று புறஜாதி தேசத்தார் நினைக்கிறார்கள். தங்களுடைய வலைகளையும் தூண்டில்களையும் அவர்கள் தெய்வமாக நினைத்து ஆராதிக்கிறார்கள்.

2 அதிகாரம்

IV. ஆபகூக்கிற்கு தேவனுடைய பதிலுரை

1. தரிசனத்தை எழுது - காரணம்

ஆப 2:1 நான் என் காவலிலே தரித்து, அரணிலே நிலை கொண்டிருந்து, அவர் எனக்கு என்ன சொல்லுவாரென்றும், அவர் என்னைக் கண்டிக்கும்போது நான் என்ன உத்தரவு சொல்லுவேனென்றும் கவனித்துப் பார்ப்பேன் என்றேன்.

ஆப 2:2 அப்பொழுது கர்த்தர் எனக்குப் பிரதியுத்தரமாக: நீ தரிசனத்தை எழுதி, அதைக் கடந்தோடுகிறவன் வாசிக்கும் படிப் பலகைகளிலே தீர்க்கமாக வரை.

ஆப 2:3 குறித்தகாலத்துக்குத் தரிசனம் இன்னும் வைக்கப் பட்டிருக்கிறது; முடிவிலே அது விளங்கும், அது பொய் சொல்லாது; அது தாமதித்தாலும் அதற்குக் காத்திரு; அது நிச்சயமாய்வரும், அது தாமதிப்பதில்லை.

தீர்க்கதரிசன எண் - 2

“அப்பொழுது கர்த்தர் எனக்குப் பிரதியுத்தரமாக..............” (ஆப 2:2-3) இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை.

நிறைவேற வேண்டிய முன்னறிவிப்புகள்

1. குறித்தகாலத்துக்குத் தரிசனம் (இயேசுகிறிஸ்துவின் இரண்டாம் வருகை - எபி 10:37) இன்னும் வைக்கப் பட்டிருக்கிறது. முடிவிலே அது விளங்கும், அது பொய் சொல்லாது (ஆப 2:3)
2. அது தாமதித்தாலும் அதற்குக் காத்திரு; அது நிச்சயமாய்வரும், அது தாமதிப்பதில்லை.

“அது நிச்சயமாய்வரும், அது தாமதிப்பதில்லை.” - இந்த வாக்கியம் எபி 10:37 ஆவது வசனத்தில் மேற்கோளாகக் கூறப்பட்டிருக்கிறது. இது இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையை உறுதிபண்ணுகிறது.

2. வேறுபட்ட சுபாவங்கள்

ஆப 2:4 இதோ, அகங்காரியாயிருக்கிறானே, அவனுடைய ஆத்துமா அவனுக்குள் செம்மையானதல்ல; தன் விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான்.

“தன் விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான்” - இந்த வாக்கியம் ரோமர் 1:17; கலா 3:11; எபி 10:38 ஆகிய வசனங்களில் மேற்கோளாகக் கூறப்பட்டிருக்கிறது.

3. பேராசை

ஆப 2:5 அவன் மதுபானத்தினால் அக்கிரமஞ் செய்து அகங்காரியாகி, வீட்டிலே தரியாமல், அவன் தன் ஆத்துமாவைப் பாதாளத்தைப்போல விரிவாக்கித் திருப்தியாகாமல், மரணத்துக்குச் சமானமாய்ச் சகல ஜாதிகளையும் தன் வசமாகச் சேர்த்து, சகல ஜனங்களையும் தன்னிடமாகக் கூட்டிக்கொண்டாலும்,

ஆப 2:6 இவர்களெல்லாரும் அவன் பேரில் ஒரு பழமொழியையும், அவனுக்கு விரோதமான வசைச் சொல்லையும் வசனித்து, தன்னுடையதல்லாததைத் தனக்காகச் சேர்த்துக் கொள்ளுகிறவனுக்கு ஐயோ என்றும், அது எந்தமட்டும் நிற்கும் என்றும், அவன் தன்மேல் களிமண் சுமையையல்லவா சுமத்திக் கொள்ளுகிறான் என்றும் சொல்வார்கள்.

ஆப 2:7 உன்னைக் கடிப்பவர்கள் சடிதியாய் எழும்புவதும், உன்னை அலைக்கழிப்பவர்கள் விழிப்பது மில்லையோ? நீ அவர்களுக்குச் சூறையாகாயோ?

ஆபகூக் - தொகுப்புரை

2 அதிகாரம்

ஆப 2:8 நீ அநேகம் ஜாதிகளைக் கொள்ளையிட்டபடியினால் ஜனங்களில் மீதியான யாவரும் நீ சிந்தின மனுஷரத்தத்தினிமித்தமும் நீ செய்த கொடுமையினிமித்தமும் உன்னைக் கொள்ளையிடுவார்கள்.

அகங்காரரின் சுபாவம்

1. செம்மையானவனல்ல. (ஆப 2:4)
2. விசுவாசத்தினால் பிழைக்கவில்லை.
3. மதுபானத்தினால் அக்கிரமஞ் செய்கிறான். (ஆப 2:5).
4. அகங்காரியாக இருக்கிறான்.
5. வீட்டிலே தரிப்பதில்லை.
6. அவன் தன் ஆத்துமாவைப் பாதாளத்தைப் போல விரிவாக்குகிறான்.
7. திருப்தியடையாதவன்.
8. பேராசைக்காரன் (ஆப 2:6).
9. கொலைபண்ணுகிறவன் (ஆப 2:9).
10. இரக்கமில்லாதவன். (ஆப 2:12).
11. மற்றவர்களின் பலனை அனுபவிக்கிறவன். (ஆப 2:15).
12. முரட்டாட்டக்காரன். இச்சிக்கிறவன்.

யூதாவின்மீது "ஐயோக்கள்"

1. தன்னுடையதல்லாததைத்தனக்காகச் சேர்த்துக்கொள்ளுகிறவனுக்கு ஐயோ (ஆப 2:6).
2. தன் வீட்டுக்குப் பொல்லாத ஆதாயத்தைத் தேடுகிறவனுக்கு ஐயோ! (ஆப 2:9).
3. அநியாயத்தினாலே நகரத்தைப் பலப்படுத்துகிறவனுக்கு ஐயோ! ஆப 2:12).
4. தன் தோழருக்குக் குடிக்கக் கொடுத்து.......... அவர்களை வெறிக்கப்பண்ணுகிறவனுக்கு ஐயோ! (ஆப 2:15).
5. விக்கிரகாராதனைக்காரருக்கு ஐயோ. (ஆப 2:19).

தீர்க்கதரிசன எண் - 3

"நீ அநேகம் ஜாதிகளைக் கொள்ளையிட்டபடியினால்........" (ஆப 2:8) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் பல தேசங்களைக் கொள்ளையிட்டான். (ஆப 2:6)

4. பொல்லாத ஆதாயத்தைத் தேடுகிறவர்களுக்கு ஐயோ

ஆப 2:9 தீமையின் வல்லமைக்குத் தப்ப வேண்டுமென்று தன் கூட்டை உயரத்திலே வைக்கும்படிக்கு, தன் வீட்டுக்குப் பொல்லாத ஆதாயத்தைத் தேடுகிறவனுக்கு ஐயோ!

ஆப 2:10 அநேக ஜனங்களை வெட்டிப் போட்டதினால் உன் வீட்டுக்கு வெட்கமுண்டாக ஆலோசனை பண்ணினாய்; உன் ஆத்துமாவுக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்தாய்.

ஆப 2:11 கல்லு சுவரிலிருந்து கூப்பிடும், உத்திரம் மச்சிலிருந்து சாட்சியிடும்.

ஆப 2:12 இரத்தப்பழிகளாலே பட்டணத்தைக் கட்டி, அநியாயத்தினாலே நகரத்தைப் பலப்படுத்துகிறவனுக்கு ஐயோ!

ஆப 2:13 இதோ, ஜனங்கள் அக்கினிக்கு இரையாக உழைத்து, ஜனங்கள் விருதாவாக இளைத்துப்போகிறது கர்த்தருடைய செயல் அல்லவோ?

2 அதிகாரம்

5. காரணம் - பூமியில் தேவனுடைய நோக்கம் - (ஏசா 11:9)

ஆப 2:14 சமுத்திரம் ஜலத்தினால் நிறைந்திருக்கிறதுபோல், பூமி கர்த்தருடைய மகிமையை அறிகிற அறிவினால் நிறைந்திருக்கும்.

தீர்க்கதரிசன எண் - 4

"சமுத்திரம் ஜலத்தினால் நிறைந்திருக்கிறது போல்....." (ஆப 2:14) இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை. இது ஆயிரம் வருஷ அரசாட்சியிலும், புதிய பூமியிலும் நிறைவேறும்.

"பூமி கர்த்தருடைய மகிமையை அறிகிற அறிவினால் நிறைந்திருக்கும்" - (ஆப 2:14; எண் 14:21; சங் 72:19; ஏசா 6:3; ஏசா 11:9).

6. மதுபானப்பிரியருக்கு ஐயோ - காரணம்

ஆப 2:15 தன் தோழருக்குக் குடிக்கக் கொடுத்துத் தன் துருத்தியை அவர்களண்டையிலே வைத்து, அவர்களுடைய நிர்வாணங்களைப் பார்க்கும்படிக்கு, அவர்களை வெறிக்கப் பண்ணுகிறவனுக்கு ஐயோ!

ஆப 2:16 நீ மகிமையினால் அல்ல, இலச்சையினால் நிரப்பப்படுவாய்; நீயும் குடித்து விருத்தசேதனமில்லாதவன் என்று விளங்கு; கர்த்தருடைய வலதுகையில் இருக்கிற பாத்திரம் உன்னிடத்திற்குத் திரும்பும்; உன் மகிமையின்மேல் இலச்சையான வாந்திபண்ணுவாய்.

ஆப 2:17 லீபனோனுக்குச் செய்த கொடுமை உன்னை மூடும்; சிந்தின மனுஷரத்தத்தினிமித்தமும் தேசத்திற்கும் பட்டணத்திற்கும் அதின் குடிகள் எல்லாருக்கும் செய்த கொடுமையினிமித்தமும் மிருகங்கள் செய்யும் பாழ்க்கடிப்பு உன்னைக் கலங்கப்பண்ணும்.

"லீபனோனுக்குச் செய்த கொடுமை உன்னை மூடும்" - லீபனோனிலுள்ள கேதுரு மரங்களை வெட்டுவது அதற்குச் செய்த கொடுமையாகும். அதுபோல தன்னுடைய அயலானை வஞ்சித்துக் கொடுமை செய்கிறவனுக்குப் பாழ்க்கடிப்பு உண்டாகும். (ஆப 2:15-17).

7. விக்கிரகாராதனைக் காரருக்கு ஐயோ - காரணம்

ஆப 2:18 சித்திரக்காரனுக்கு அவன் செய்த சுரூபமும், ஊமையான தெய்வங்களை உண்டுபண்ணித் தான் உருவாக்கின சுரூபத்தை நம்பினவனுக்கு வார்க்கப்பட்டதும் பொய்ப்போதகம் பண்ணுகிறதுமான விக்கிரகமும் என்னத்துக்கு உதவும்?

ஆப 2:19 மரத்தைப்பார்த்து விழியென்றும், ஊமையான கல்லைப்பார்த்து எழும்பு என்றும் சொல்லுகிறவனுக்கு ஐயோ! அது போதிக்குமோ? இதோ, அது பொன்னும் வெள்ளியுமான தகட்டால் மூடப் பட்டிருக்கிறது; அதற்குள்ளே சுவாசம் இல்லையே?

ஆப 2:20 கர்த்தரோவென்றால், தமது பரிசுத்த ஆலயத்தில் இருக்கிறார்; பூமியெல்லாம் அவருக்கு முன்பாக மௌனமாயிருக்கக்கடவது.

தீர்க்கதரிசன எண் - 5

"கர்த்தரோவென்றால், தமது பரிசுத்த ஆலயத்தில் இருக்கிறார்....." (ஆப 2:20) இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை. இது ஆயிரம் வருஷ அரசாட்சியிலும், புதிய பூமியிலும் நிறைவேறும்.

"தமது பரிசுத்த ஆலயம்" - மேசியா பூமியில் நித்தியமாக ஆளுகை செய்யும்போது அவர் தமது பரிசுத்த ஆலயத்தில் இருப்பார். (ஏசா 9:6-7; எசே 43:7; எசே 48:34; சக. 6:12-13; சக. 14:5,9; வெளி. 11:15; வெளி. 20:1-10).

3 அதிகாரம்

V. ஆபகூக்கின் ஜெபம் - (3:1-17)

1. தேச எழுப்புதலுக்காக

ஆப 3:1 ஆபகூக் தீர்க்கதரிசி சிகாயோனில் பாடின விண்ணப்பம்.

ஆப 3:2 கர்த்தாவே, நீர் வெளிப்படுத்தினதை நான் கேட்டேன், எனக்குப் பயமுண்டாயிற்று; கர்த்தாவே, வருஷங்களின் நடுவிலே உம்முடைய கிரியையை உயிர்ப்பியும், வருஷங்களின் நடுவிலே அதை விளங்கப்பண்ணும்; கோபித்தாலும் இரக்கத்தை நினைத்தருளும்.

"சிகாயோன்" (Shigionoth) - இந்தப் பெயருக்குச் "சத்தமிட்டு அலறுதல்" "a crying aloud" என்று பொருள்.

"வருஷங்கள்" - கர்த்தருடைய கோபாக்கினையின் வருஷங்கள். இக்காலத்தில் கர்த்தர் தம்முடைய இரக்கத்தை வெளிப்படுத்த வேண்டுமென்று தீர்க்கதரிசி விண்ணப்பம் பண்ணுகிறார்.

2. தேவனுடைய முப்பது அம்ச மகத்துவம்

ஆப 3:3 தேவன் தேமானிலிருந்தும், பரிசுத்தர் பாரான் பர்வதத்திலிருந்தும் வந்தார்; சேலா. அவருடைய மகிமை வானங்களை மூடிக்கொண்டது; அவர் துதியினால் பூமி நிறைந்தது.

ஆப 3:4 அவருடைய பிரகாசம் சூரியனைப் போலிருந்தது; அவருடைய கரத்திலிருந்து கிரணங்கள் வீசின; அங்கே அவருடைய பராக்கிரமம் மறைந்திருந்தது.

ஆப 3:5 அவருக்கு முன்பாகக் கொள்ளை நோய் சென்றது; அவர் அடிகளிலிருந்து எரிபந்தமான காய்ச்சல் புறப்பட்டது.

ஆப 3:6 அவர் நின்று பூமியை அளந்தார்; அவர் பார்த்துப் புறஜாதிகளைக் கரையப்பண்ணினார்; பூர்வ பர்வதங்கள் சிதறடிக்கப்பட்டது, என்றுமுள்ள மலைகள் தாழ்ந்தது; அவருடைய நடைகள் நித்திய நடைகளாயிருந்தது.

ஆப 3:7 கூஷானின் கூடாரங்கள் வருத்தத்தில் அகப்பட்டிருக்கக் கண்டேன்; மீதியான் தேசத்தின் திரைகள் நடுங்கின.

ஆப 3:8 கர்த்தர் நதிகளின்மேல் கோபமாயிருந்தாரோ? தேவரீர் உம்முடைய குதிரைகளின் மேலும் இரட்சிப்புண்டாக்குகிற உம்முடைய இரதங்களின் மேலும் ஏறிவருகிற போது, உமது கோபம் நதிகளுக்கும் உமது சினம் சமுத்திரத்திற்கும் விரோதமாயிருந்ததோ?

ஆப 3:9 கோத்திரங்களுக்கு ஆணையிட்டுக் கொடுத்த வாக்கின்படியே உம்முடைய வில் நாணேற்றப்பட்டதாக விளங்கினது; சேலா. நீர் பூமியைப் பிளந்து ஆறுகளை உண்டாக்கினீர்.

ஆப 3:10 பர்வதங்கள் உம்மைக்கண்டு நடுங்கின; ஜலம் பிரவாகித்துக் கடந்துபோயிற்று; ஆழி இரைந்தது; அதின் கைகளை உயர எடுத்தது.

ஆப 3:11 சந்திரனும் சூரியனும் தன்தன் மண்டலத்தில் நின்றன; உமது அம்புகளின் ஜோதியிலும், உமது ஈட்டியினுடைய மின்னல் பிரகாசத்திலும் நடந்தன.

ஆப 3:12 நீர் கோபத்தோடே பூமியில் நடந்தீர், உக்கிரத்தோடே ஜாதிகளைப் போரடித்தீர்.

ஆப 3:13 உமது ஜனத்தின் இரட்சிப்புக்காகவும் நீர் அபிஷேகம் பண்ணுவித்தவனின் இரட்சிப்புக் காகவுமே நீர் புறப்பட்டீர்; கழுத்தளவாக அஸ்திபாரத்தைத் திறப்பாக்கி, துஷ்டனுடைய வீட்டிலிருந்த தலைவனை வெட்டினீர்; சேலா.

3 அதிகாரம்

ஆப 3:14 என்னைச் சிதறடிப்பதற்குப் பெருங்காற்றைப்போல் வந்தார்கள்; சிறுமையானவனை மறைவிடத்திலே பட்சிப்பது அவர்களுக்குச் சந்தோஷமாயிருந்தது; நீர் அவனுடைய ஈட்டிகளினாலேயே அவனுடைய கிராமத்து அதிபதிகளை உருவக் குத்தினீர்.

ஆப 3:15 திரளான தண்ணீர் குவியலாகிய சமுத்திரத்துக்குள் உமது குதிரைகளோடே நடந்துபோனீர்.

"தேவன் தேமானிலிருந்தும், பரிசுத்தர் பாரான் பர்வதத்திலிருந்தும் வந்தார்" - கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை எகிப்து தேசத்திலிருந்து தேமான், பாரான் பர்வதம் ஆகியவற்றின் வழியாக வழிநடத்தி வந்தார்.

"அவருடைய கரத்திலிருந்து கிரணங்கள் வீசின" - கிரணம் (Horns) என்பதற்கு "வல்லமை" "power" என்று பொருள். கர்த்தருடைய கரங்களிலிருந்து அவருடைய மகிமையின் ஒளிக்கதிர்கள் வெளிப்படுகிறது.

தேவனுடைய மகத்துவம்

1. தேவன் தேமானிலிருந்தும், பரிசுத்தர் பாரான் பர்வதத்திலிருந்தும் வந்தார் (ஆப 3:3).
2. அவருடைய மகிமை வானங்களை மூடிக்கொண்டது.
3. அவர் துதியினால் பூமி நிறைந்தது.
4. அவருடைய பிரகாசம் சூரியனைப் போலிருந்தது (ஆப 3:4).
5. அவருடைய கரத்திலிருந்து கிரணங்கள் வீசின.
6. அங்கே அவருடைய பராக்கிரமம் மறைந்திருந்தது.
7. அவருக்கு முன்பாகக் கொள்ளை நோய் சென்றது (ஆப 3:5).
8. அவர் அடிகளிலிருந்து எரிபந்தமான காய்ச்சல் புறப்பட்டது.
9. அவர் நின்று பூமியை அளந்தார். (ஆப 3:6).
10. அவர் பார்த்துப் புறஜாதிகளைக் கரையப் பண்ணினார்.
11. பூர்வ பர்வதங்கள் சிதறடிக்கப்பட்டது.
12. என்றுமுள்ள மலைகள் தாழ்ந்தது.
13. அவருடைய நடைகள் நித்திய நடைகளாயிருந்தது.
14. தேவரீர் தம்முடைய குதிரைகளின் மேலும் இரட்சிப்புண்டாக்குகிற தம்முடைய இரதங்களின் மேலும் ஏறிவருகிறார். (ஆப 3:8).
15. கோத்திரங்களுக்கு ஆணையிட்டுக் கொடுத்த வாக்கின்படியே அவருடைய வில் நாணேற்றப்பட்டதாக விளங்கினது (ஆப 3:9)
16. அவர் பூமியைப் பிளந்து ஆறுகளை உண்டாக்கினார்.
17. பர்வதங்கள் அவரைக்கண்டு நடுங்கின (ஆப 3:10).
18. ஜலம் பிரவாகித்துக் கடந்துபோயிற்று.
19. ஆழி இரைந்தது; அதின் கைகளை உயர எடுத்தது.
20. சந்திரனும் சூரியனும் தன்தன் மண்டலத்தில் நின்றன (ஆப 3:11).
21. அவருடைய அம்புகளின் ஜோதியிலும், அவருடைய ஈட்டியினுடைய மின்னல் பிரகாசத்திலும் நடந்தன.
22. அவர் கோபத்தோடே பூமியில் நடந்தார். (ஆப 3:12).
23. உக்கிரத்தோடே ஜாதிகளைப் போரடித்தார்.
24. தமது ஜனத்தின் இரட்சிப்புக்காகவும் அவர் அபிஷேகம் பண்ணுவித்தவனின் இரட்சிப்புக் காகவுமே அவர் புறப்பட்டார். (ஆப 3:13).

ஆபகூக் - தொகுப்புரை

3 அதிகாரம்

25. கழுத்தளவாக அஸ்திபாரத்தைத் திறப்பாக்கி, துஷ்டனுடைய வீட்டிலிருந்த தலைவனை வெட்டினார்.

26. கர்த்தர் அவனுடைய ஈட்டிகளினாலேயே அவனுடைய கிராமத்து அதிபதிகளை உருவக் குத்தினார். (ஆப 3:14).

27. திரளான தண்ணீர் குவியலாகிய சமுத்திரத்துக்குள் தமது குதிரைகளோடே நடந்துபோனார். (ஆப 3:15).

"உம்முடைய குதிரைகள்" - கர்த்தருடைய குதிரைகளைப் பற்றி ஆபகூக் தன்னுடைய ஜெபத்தில் இரண்டு இடங்களில் குறிப்பிட்டிருக்கிறார். (ஆப 3:8,15) குதிரைகளுக்குப் பிரத்தியட்சமான பொருள் கொடுக்க வேண்டும். (2இராஜா 2:11; 2இராஜா 6:14-17; யோவே 2:4; சக. 1:8; சக. 6:1-6; வெளி. 19:11,14,21).

"இரட்சிப்புண்டாக்குகிற உம்முடைய இரதங்கள்" - இந்த இரதங்களுக்கும் பிரத்தியட்சமான பொருள் கொடுக்க வேண்டும். (ஆப 3:8; 2இராஜா 2:11-12; 2இராஜா 6:14-17; சங் 68:17; யோவே 2:5; சக. 6:1).

"வில்" - இது கர்த்தருடைய வார்த்தைக்கு அடையாளம்.

3. ஆபகூக்கின்மீது ஏற்பட்ட விளைவு

ஆப 3:16 நான் கேட்டபொழுது என் குடல் குழம்பிற்று; அந்தச் சத்தத்துக்கு என் உதடுகள் துடித்தது; என் எலும்புகளில் உக்கல் உண்டாயிற்று; என் நிலையிலே நடுங்கினேன்; ஆனாலும் எங்களோடே எதிர்க்கும் ஜனங்கள் வரும்போது, இக்கட்டு நாளிலே நான் இளைப்பாறுதல் அடைவேன்.

"நான் கேட்டபொழுது.........." நடைபெற்ற சம்பவம்

1. என் குடல் குழம்பிற்று.
2. அந்தச் சத்தத்துக்கு என் உதடுகள் துடித்தது.
3. என் எலும்புகளில் உக்கல் உண்டாயிற்று.
4. என் நிலையிலே நடுங்கினேன்.

4. ஆறு அம்ச பொருத்தனை

ஆப 3:17 அத்திமரம் துளிர்விடாமற் போனாலும், திராட்சச்செடிகளில் பழம் உண்டாகாமற் போனாலும், ஒலிவமரத்தின் பலன் அற்றுப்போனாலும், வயல்கள் தானியத்தை விளைவியாமற் போனாலும் கிடையில் ஆட்டு மந்தைகள் முதலற்றுப் போனாலும், தொழுவத்திலே மாடு இல்லாமற் போனாலும்,

ஆப 3:18 நான் கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்பேன், என் இரட்சிப்பின் தேவனுக்குள் களிகூருவேன்.

ஆப 3:19 ஆண்டவராகிய கர்த்தர் என் பெலன்; அவர் என் கால்களை மான்கால்களைப்போலாக்கி, உயரமான ஸ்தலங்களில் என்னை நடக்கப் பண்ணுவார்.

இது நெகிநோத் என்னும் வாத்தியத்தில் வாசிக்க இராகத் தலைவனுக்கு ஒப்புவிக்கப்பட்ட சங்கீதம்.

ஆபகூக்கின் பிரதிஷ்டை (ஆப 3:17-18)

இங்கு கூறப்பட்டிருக்கும் சூழ்நிலையிலும், ஆபகூக் தான் கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்பதாகவும், தன் இரட்சிப்பின் தேவனுக்குள் களிகூருவதாகவும் கூறுகிறார்.

ஆபகூக் - தொகுப்புரை

3 அதிகாரம்

சூழ்நிலைகளின் விவரம்

1. அத்திமரம் துளிர்விடாமற்போனாலும்
2. திராட்சச்செடிகளில் பழம் உண்டாகாமற் போனாலும்.
3. ஒலிவமரத்தின்பலன் அற்றுப்போனாலும்.
4. வயல்கள் தானியத்தை விளைவியாமற் போனாலும்.
5. கிடையில் ஆட்டுமந்தைகள் முதலற்றுப் போனாலும்.
6. தொழுவத்திலே மாடு இல்லாமற் போனாலும்.

ஆபகூக் பிரதிஷ்டை பண்ணியதின் இரகசியம்

1. ஆண்டவராகிய கர்த்தர் ஆபகூக்கின் பெலன்.
2. அவர் ஆபகூக்கின் கால்களை மான்கால்களைப்போலாக்கினார்.
3. உயரமான ஸ்தலங்களில் ஆபகூக்கை நடக்கப்பண்ணுவார்.